சி.ஆர்.எம்.பி.எண்.8/2021

ம.சா.1 ஞானசக்தியின் வாக்குமூலம்

நான் தாதம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த மனுவில் கொடுத்த எதிரிகள் எனக்கு மனைவி, மாமியார், மாமனார், மச்சான்கள், சின்னமாமியார் மாமனார்கள் ஆகவேண்டும். எனது மனைவி பூஞ்சோலைக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு காரணமாக இரண்டு ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எனது மனைவி எனக்கு வழக்கறிஞர் மூலம் சட்டஅறிவிப்பு அனுப்பினார். அந்த சட்டஅறிவிப்பில் எனது பூஞ்சோலை என்னுடன் சேர்ந்து வாழ்வதாக ஒரு சட்டஅறிவிப்பு அனுப்பியிருந்தார். அதற்கு நான் எனது வழக்கறிஞர் மூலம் சேர்ந்து வாழ்வதாக பதில் சட்டஅறிவிப்பு கொடுத்தேன். அதன் பிறகு எனது மனைவி பூ்ஞ்சோலை என்னுடன் சேர்ந்து வாழவில்லை அதன் பிறகு ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி 4/2018 படி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழ்கு நிலுவையில் உள்ளது. மேற்படி எச்.எம்.ஓபி 5.7.2018 வாய்தாயிருந்து நான் ஆஜரானேன். எனது மனைவி ஆஜராகவில்லை. அதன் பிறகு 30.7.2018 தேதியில் நான் ஆஜரானேன். என் மனைவி ஆஜராகவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டு நான் வீட்டிற்கு வந்து வீட்டிலிருக்கும்போழுது மாலை 6.30 மணியளவில் இன்டிகா கார் மற்றும் 3 இருசக்கர வாகனத்தில் பூஞ்சோலை, ஜெயலட்சுமி, செல்வி, சசிகலா, பரமசிவன், நடராஜ், சிலம்பரசன், கேசவன், திருமூர்த்தி, மணிகண்டன் ஆகிய 12 நபர்கள் எனது வீட்டிற்கு முன்பு வந்தார்கள். ஜெயலட்சமி, கேசவன், சசிகலா செல்வி, பூஞ்சோலை ஆகியோர் வந்து வாங்கடா தேவிடியா பசங்களே வெளியே உங்களை ஒழித்துகட்டதமான் நாங்கள் படையுடன் வந்தருக்கிறோம் என்று கூறி மிரட்டினார்கள். சிலம்பரசன், கேசவன், அன்பரசு, நடராஜன் மணிகண்டன், ஆகியோர் இரும்பு கம்பி தடி கத்தி ஆகியவற்றை கையில் வைத்துக்கொண்டு தேவிடியா பையா கண்டார ஓலி பையா கூட்டிக்கொடுத்து வாங்கி தின்றியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி உன்னை வெட்டாமல் விடமாட்டோம் போட்டு தள்ளிவிடுவோம் என்று கூறி மிரட்டினார்கள். அதன்பிறகு சித்தப்பா

சின்னசாமி அங்கு வந்தார். எனது மனைவி பூஞ்சோலை, மாமியார் ஜெயலட்சுமி சசிகலா, செல்வி ஆகியோர் எனது சித்தப்பாவை பார்த்து தேவிடியா பையா கண்டார ஓலி பையா கூட்டிக்கொடுத்து வாங்கி தின்றியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கத்தியை காட்டி மிரட்டினார்கள். எங்கள் ஊரைச்சேர்ந்த ராமமூர்த்தி என்பவர் எங்களை அங்கிருந்து காப்பாற்றி அழைத்து சென்று போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதன் பிறகு புகாரை பெற்றுக்கொண்ட போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் மறுநாள் வரும்படி கூறினார்கள் .நான் மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்றேன். ஆனால் அவாகள் வரவில்லை. அதன் பிறகு போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் 8.8.2018-ம் தேதியில் நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணகிரி மற்றும் துணை கண்காணிப்பாளர் பர்கூர் முதலமைச்சர் தனபிரிவுக்கும் புகார் அனுப்பினேன். அதை பெற்றுக்கொண்டு அவர்கள் என்னுடைய புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் இந்த தனி புகார் மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் எற்பட்டுள்ளது. எனவே கனம் கோர்ட்டார் அவாகள் எனது புகாரை கோப்புக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.